# 1. வீரிய ஒட்டு நெல் - கோஆர்எச் 3

சிறப்பியல்புகள்

- குறுகிய கால வீரிய ஒட்டு நெல் (115 நாட்கள்)
- நடுத்தர சன்ன வெள்ளை நிற அரிசி
- நல்ல சமையல் பண்புகள் கொண்டது
- குலை நோய் மற்றும் துங்ரோ நோயை தாங்கி வளரக்கூடியது
- பச்சை தத்துப்பூச்சிக்கு எதிர்ப்பு சக்தி கொண்டது. வெண்முதுகு தத்துப்பூச்சி மற்றும் புகையானை தாங்கி வளரக்கூடியது
- ஒரே சமயத்தில் பூக்கும் தன்மையுடைய பெற்றோரை உடையது

உருவாக்கிய முறை : டிஎன்ஏயு சிஎம்எஸ் 3 ஏ , சிபி 87 ஆர்

வயது (நாட்கள்) : 110-115

பருவம் : கார் , குறுவை , சொர்ணவாரி , நவரை

தானிய விளைச்சல்

| | |
|---|---|
| கிலோ , எக் | 6475 |
| கூடுதல் மகசூல் | |
| ஏடிடீ 39ஐ விட | 24.3 |
| ஏடிடீ 43ஐ விட | 28.4 |
| ஏடிடீஆர்எச் 1ஐ விட | 13.2 |

அதிகபட்ச மகசூல் : 10972 கிலோ,எக்

பயிரிட உகந்த மாவட்டங்கள் : தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் பாசன பகுதிகளில் பயிரிட ஏற்றது



## 2. நெல் – ஆர்எம்டி (ஆர்) 1

சிறப்பியல்புகள்

- மானாவாரி நேரடி விதைப்பிற்கேற்ற நெல் இரகம், குறைந்த வயது
- மானாவாரியில் அதிக மகசூல் தரவல்லது
- வறட்சியை தாங்கி வளரக்கூடிய தன்மையுடையது
- மத்திய குட்டை மற்றும் சாயாத தன்மை கொண்ட செடிகள்
- நீள பருமன் மற்றும் வெள்ளை நிற அரிசி
- அதிக மாவுப்பொருள் (25.6% ) மற்றும் முழு அரிசி திறன் (59.0%)
- குறுத்துப்பூச்சி மற்றும் இலைசுருட்டு புழுவுக்கு எதிர்ப்பு சக்தி கொண்டது
- பாக்டீரியா இலை கருகல், குலை நோய் மற்றும் கதிர் உறை அழுகல் நோயை தாங்கி வளரக்கூடியது

| | |
|---|---|
| உருவாக்கிய முறை : | ***டி.ஜீ.ஆர் 75 என்ற இரகத்திலிருந்து தனி வழித் தேர்வு*** |
| வயது (நாட்கள்) : | 100 – 105 |
| பருவம் : | ***செப்டம்பர் - அக்டோபர் நேரடி விதைப்பு*** |

தானிய விளைச்சல்

| | |
|---|---|
| கிலோ / எக் | 4000 |
| கூடுதல் மகசூல் | |
| பிஎம்கே 2 ஐ விட | 20.1 |
| பிஎம்கே 3 ஐ விட | 21.8 |
| எம்டியு 5 ஐ விட | 25.5 |

| | |
|---|---|
| அதிகபட்ச மகசூல் : | 5134 கிலோ / எக் |
| பயிரிட உகந்த மாவட்டங்கள் : | இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் திருவள்ளூர் |



## 3. நெல் - டிபிஎஸ் (ஆர்) 4

சிறப்பியல்புகள்

- மிகக்குறைந்த வயது
- அதிக விளைச்சல்
- நடுத்தர பருமனான வெள்ளை அரிசி
- குலைநோய், இலைப்புள்ளி நோய், இலையுறை கருகல் நோய்களும் தண்டுப் புழு, இலை மடக்குப் புழு, புகையான் பச்சை தத்துப் பூச்சிகளுக்கு வயல்களில் எதிர்ப்புத் திறன் கொண்டது

| | |
|---|---|
| உருவாக்கிய முறை | டி. எஸ் 29 , அம்பை16 |
| வயது (நாட்கள்) | 95 |
| பருவம் | கன்னிப்பூ (ஜூன் - செப்டம்பர்)<br>கும்பப்பூ (அக்டோபர் - பிப்ரவரி) |

தானிய விளைச்சல்

| | |
|---|---|
| கிலோ , எக் | 5840 |
| கூடுதல் மகசூல் | |
| எம்டியு 5ஐ விட | 20.0 |
| ஏஎஸ்டி 17ஐ விட | 27.0 |

| | |
|---|---|
| அதிகபட்ச மகசூல் | 8050 கிலோ,எக் |
| பயிரிட உகந்த மாவட்டங்கள் | கன்னியாகுமரி மாவட்டத்தில் கால்வாய் பாசனத்தில் கடைவரம்பு பகுதிகளில் சாகுபடிக்கேற்றது |



## 4. வீரிய ஒட்டு மக்காச்சோளம் - கோஎச் (எம்) 5

சிறப்பியல்புகள்

- அதிக மகசூல் தரக்கூடிய இருவழி வீரிய ஒட்டு இரகம்
- அடிச்சாம்பல் நோய்க்கு எதிர்ப்புத்திறன்
- தண்டு துளைப்பான் பூச்சிக்கு மிதமான எதிர்ப்புத்திறன்
- பருமனான மஞ்சள் நிற தானியங்கள்
- அதிக மாவு (68.7 சதம்) மற்றும் புரதச் (8. 23 சதம்) சத்துக்கள்
- வீரிய ஒட்டு விதை உற்பத்தி மிகவும் எளிது.

| | | |
|---|---|---|
| உருவாக்கிய முறை | : | யுஎம்ஐ 285 (பெண்) மற்றும் யுஎம்ஐ 61 (ஆண்) இவற்றின் வீரிய ஒட்டு |
| வயது (நாட்கள்) | : | 110-115 |
| பருவம் | : | இறவை - ஆண்டு முழுவதும்<br>மானாவாரி - புரட்டாசிப்பட்டம் (செப்டம்பர் - அக்டோபர்) |

தானிய விளைச்சல்

| | இறவை | மானாவாரி |
|---|---|---|
| கிலோ , எக் | 5400 | 4280 |
| கூடுதல் மகசூல் | | |
| கோஎச்(எம்) 4ஐ விட | 240 | |

| | | |
|---|---|---|
| அதிகபட்ச மகசூல் | : | 8500 கிலோ,எக் |
| பயிரிட உகந்த மாவட்டங்கள் | : | மக்காச்சோளம் சாகுபடியாகும் அனைத்து மாவட்டங்கள் |



## 5. சாமை - கோ (சாமை) 4

சிறப்பியல்புகள்

- உயர்விளைச்சல் தரக்கூடியது
- குறுகிய கால வயதுடையது
- வறட்சியைத் தாங்கவல்லது
- மதிப்பூட்டப் பெற்ற பதார்த்தங்கள் செய்வதற்குகேற்ற தானியக் குணாதிசியங்கள் பெற்றது
- இருபோக பயிர் சுழற்சிக்கு உகந்தது (சாமை — கொள்ளு)
- குறிப்பிட்டு சொல்லும்படியான பூச்சி மற்றும் பூஞ்சாண தாக்குதல் இல்லை.
- தட்டை தீவனத்திற்கேற்றது

உருவாக்கிய முறை : கோ 2 , எம்எஸ் 1684

வயது (நாட்கள்) : 75 - 80

பருவம் : மானாவாரி - ஆடிப்பட்டம் (ஜுன்-ஜுலை)

தானிய விளைச்சல்

| | |
|---|---|
| கிலோ , எக் | 1567 |
| கூடுதல் மகசூல் | |
| கோ 30 ஐ விட | 14.2 |
| பையூர் 2 | 12.7 |
| ஓஎல்எம் 203 | 19.9 |

அதிகபட்ச மகசூல் : 2820 கிலோ,எக்

தட்டை மகசூல் : 5783 கிலோ,எக்

பயிரிட உகந்த மாவட்டங்கள் : தர்மபுரி, கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, வேலூர், சேலம், திருச்சி, விழுப்புரம், திண்டுக்கல், நாமக்கல் மற்றும் தேனீ



## 6. பாசிப்பயறு – கோ (ஜிஜி) 7

சிறப்பியல்புகள்

- அதிக விளைச்சல் (890 கிலோ , எக்டர்)
- குறுகிய கால இரகம் (60-65 நாட்கள்)
- அதிக புரதச்சத்து (25.2 சதம்)
- சமையலுக்கு ஏற்ற நடுத்தர பருமனான விதைகள்
- தென்மண்டல பகுதிக்கு ஏற்ற இரகமாக கோஜிஜி 912 என்ற பெயரில் மத்திய இரக வெளியீட்டு குழுவினால் அங்கீகரிப்பட்டுள்ளது

உருவாக்கிய முறை ' எம்ஜிஜி 336 , கோஜிஜி 902

வயது (நாட்கள்) ' 62

பருவம் ' ஆடிப்பட்டம்

விளைச்சல்

| | |
|---|---|
| கிலோ , எக் | 978 |
| கூடுதல் மகசூல் | |
| கோ 6 | 23.5 |

அதிகபட்ச மகசூல் ' 992 கிலோ,எக்

பயிரிட உகந்த மாவட்டங்கள் ' தமிழ்நாடு முழுவதும்



## 7. பனிப்பயறு – டிஎம்வி (எம்பி) 1

சிறப்பியல்புகள்

- குறைந்த வயதுடைய கொத்து இரகம்
- அதிக மகசூலும், அதிக புரதச் சத்தும் கொண்டது
- அதிக தீவன மகசூல்
- வெள்ளை ஈ, புகையிலைப் புழு மற்றும் காய்ப் புழு ஆகிய பூச்சிகளுக்கும், மஞ்சள் தேமல் நோய்க்கும் ஓரளவு எதிர்ப்புத் திறன் கொண்டது

| | |
|---|---|
| உருவாக்கிய முறை | விழுப்புரம் நாட்டு இரகத்திலிருந்து தனிவழித் தேர்வு |
| வயது (நாட்கள்) | 65 – 70 |
| பருவம் | நவம்பர் - டிசம்பர் (கார்த்திகைப் பட்டம்) |

தானிய விளைச்சல்

| | |
|---|---|
| கிலோ , எக் | 933 |
| கூடுதல் மகசூல் | |
| விழுப்புரம் நாட்டு இரகத்தை விட | 30.3 |

| | |
|---|---|
| அதிகபட்ச மகசூல் | 1830 கிலோ,எக் |
| காய்ந்த தீவன மகசூல் | 3.13 டன்,எக் (நாட்டு இரகத்தை விட 16.7சதம் அதிகம்) |
| பயிரிட உகந்த மாவட்டங்கள் | விழுப்புரம் |



## 8. நிலக்கடலை - டிஎம்வி (ஜிஎன்) 13

சிறப்பியல்புகள்

- முதிர்வு கால வறட்சியைத் தாங்கி வளரும் தன்மை
- காய்கள் கொத்தாகக் காணப்படும்
- விரும்பத்தக்க வகையில் காய்களின் குணங்கள்
- சிவப்பு நிறத் தோலுடன் அதிக எண்ணெய்ச் சத்து கொண்ட பருப்புகள்

| | |
|---|---|
| உருவாக்கிய முறை | பொள்ளாச்சி சிவப்பு இரகத்திலிருந்து தனிவழித் தேர்வு |
| வயது (நாட்கள்) | 100 – 105 |
| பருவம் | மானாவாரி மற்றும் இறவை |

விளைச்சல்

| | மானாவாரி | இறவை |
|---|---|---|
| கிலோ , எக் | 1613 | 2580 |
| கூடுதல் மகசூல் | | |
| விஆர்ஐ ஐ விட | 20.4 | 17.5 |
| டிஎம்வி 2 ஐ விட | 22.4 | 25.8 |
| உள்ளூர் சிகப்பு | 24.0 | 21.8 |

| | |
|---|---|
| அதிகபட்ச மகசூல் | 4550 கிலோ,எக் |
| பயிரிட உகந்த மாவட்டங்கள் | தமிழகமெங்கும் நிலக்கடலை பயிரிடப்படும் இடங்கள் |



## 9. சூரியகாந்தி – கோ(எஸ்எப்வி) 5

சிறப்பியல்புகள்

- அதிக சுய விதை பிடிப்புத் திறன்
- அதிக எண்ணெய் சத்து (40.3 %)
- அதிக எண்ணெய் மகசூல்

| | | |
|---|---|---|
| உருவாக்கிய முறை | : | *ஹீலியான்தஸ் ஆனஸ் , ஹீலியான்தஸ் பிரியாகாக்ஸ்* இனக்கலப்பிலிருந்து தேர்வு |
| வயது (நாட்கள்) | : | 85 - 90 |
| பருவம் | : | மானாவாரி மற்றும் இறவை |

விளைச்சல்

| | மானாவாரி | இறவை |
|---|---|---|
| கிலோ , எக் | 1360 | 1520 |
| கூடுதல் மகசூல் | | |
| கோ 4 ஐ விட | 18.5 | 15.6 |
| மார்டன் ஐ விட | 37.7 | 34.7 |

| | | |
|---|---|---|
| அதிகபட்ச மகசூல் | : | 3550 கிலோ,எக் |
| பயிரிட உகந்த மாவட்டங்கள் | : | தமிழகமெங்கும் சூரியகாந்தி பயிரிடப்படும் இடங்கள் |



## 10. பருத்தி – கேசி 3

சிறப்பியல்புகள்

- நடுத்தர வயதுடையது
- அதிக பருத்தி மகசூல் தரக்கூடியது (1081 கிலோ,எக்டர்)
- 37 சதவீதம் அறவைத்திறன் கொண்டது
- நடுத்தர நீண்ட இழைநீளம் கொண்டது (26.4 மி.மீ)
- சிர்காட், மும்பை நிர்ணயத்துள்ள (0.8) இழை வலிமை மற்றும் இழை நீளம் விகிதம் கொண்டது (0.81)
- தத்துப்பூச்சி தாக்குதல், ஆல்டர்நேரியா இலைப்புள்ளி மற்றும் தயிர்புள்ளி நோயைத் தாங்கி வளரும் தன்மையுடையது
- வறட்சியைத் தாங்கி வளரும் தன்மையுடையது

உருவாக்கிய முறை : டி.கே.எச். 497 மற்றும் கே.சி. 1
வயது (நாட்கள்) : 140
பருவம் : செப்டம்பர் - அக்டோபர்
விளைச்சல்

| | |
|---|---|
| கிலோ , எக் (கொட்டை பருத்தி) | 1080 |
| கூடுதல் மகசூல் | |
| கேசி 2 ஐ விட | 35.3 |
| எம்சியு 10 ஐ விட | 35.8 |
| எல்ஆர்ஏ 5166 ஐ விட | 30.2 |
| எஸ்விபிஆர் 2 ஐ விட | 63.5 |

அதிகபட்ச மகசூல் : 2146 கிலோ,எக் (கொட்டை பருத்தியுடன்)

பயிரிட உகந்த மாவட்டங்கள் : தென்தமிழகத்தின் தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் கரிசல் மண் நிலத்தில் வடகிழக்கு பருவ மழையில் மானாவாரி சாகுபடி செய்ய ஏற்றதாகும்



## 11. கரும்பு - கோக (எஸ்சி) 23

சிறப்பியல்புகள்

- மறுதாம்பு சாகுபடிக்கு ஏற்றது
- சர்க்கரைச் சத்து 12.95 சதம்
- செவ்வழுகல் நோய்க்கு மிதமான எதிர்ப்புத்திறன் கொண்டது
- சாயாது மற்றும் பூக்காது
- நேராக வளரக்கூடிய, நடுத்தர பருமனான கரும்பு
- குழி நடவு முறை, சொட்டு நீர்ப்பாசனம்
- வறட்சியை தாங்கி வளரக்கூடியது மற்றும் இடர்ப்பாடான மண் வகைகளிலும் நன்கு வளரக்கூடியது.
- நார்ச்சத்து அதிகமுள்ளதால் (12.52%) சர்க்கரை ஆலைகளில் மின் உற்பத்திக்கு மிகவும் ஏற்றது.

உருவாக்கிய முறை ' 69 ஏ 591 ஜிசி

வயது (நாட்கள்) ' 300 - 330

பருவம் ' முன்பட்டம் (மார்கழி - தை)

விளைச்சல்

| | கரும்பு | சர்க்கரை |
|---|---|---|
| டன் , எக் (நடவுப்பயிர்) | 133.05 | 17.64 |
| கூடுதல் மகசூல் | | |
| கோ 86032 ஐ விட | 11.15 | 13.51 |
| கோசி 98061 ஐ விட | 14.40 | 23.96 |

அதிகபட்ச மகசூல் ' 235.0 டன் , எக்

பயிரிட உகந்த மாவட்டங்கள் ' தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி மாநிலங்களில் நீர்ப்பாசன வசதியுள்ள அனைத்து மண் வகைகளுக்கும் ஏற்றது



## 12. தக்காளி - கோஎல்சிஆர்எச் 3

சிறப்பியல்புகள்

- செடிகள் 80-85 செ.மீ உயரம் வரை வளரக் கூடியவை
- அடர் நடவு முறைக்கு மிகவும் ஏற்றது
- பழங்களானது காய்ப்பருவத்தில் வெண்மை கலந்த பச்சை நிறத்துடனும், பழுத்த நிலையில் சிவப்பு நிறத்துடன், கொத்தாகவும் (கொத்திற்கு 3-5 பழங்கள் வரை), 65-70 கி எடையுடனும், உருண்டை வடிவிலோ அல்லது சிறிது நீள் உருண்டை வடிவிலோ இருக்கும்.
- இலைச் சுருட்டு நோய்க்கு எதிர்ப்புத் திறன் கொண்ட இவ்வீரிய ஒட்டு இரகமானது பூச்சி மருந்து தெளிக்காமல் அதிக மகசூல் தரவல்லது.

| | | |
|---|---|---|
| உருவாக்கிய முறை | ' | எல்சிஆர் 2 , சிஎல்என்2123 ஏ |
| வயது (நாட்கள்) | ' | 140 - 145 |
| பருவம் | ' | மே-ஜூன், நவம்பர்- டிசம்பர் மற்றும் பிப்ரவரி - மார்ச் |

விளைச்சல்

| | |
|---|---|
| டன் , எக் (பழங்கள்) | 90.2 |
| கூடுதல் மகசூல் | |
| கோடிஎச் 1 ஐ விட | 22.4 |
| லட்சுமி வீரிய ஒட்டு ஐ விட | 27.9 |

| | | |
|---|---|---|
| அதிகபட்ச மகசூல் | ' | 117.3 டன்,எக் |
| பயிரிட உகந்த மாவட்டங்கள் | ' | கோவை, ஈரோடு, தர்மபுரி, சேலம், மதுரை, நாமக்கல், திருநெல்வேலி, தூத்துக்குடி, திருவண்ணாமலை, திருச்சி, விருதுநகர் மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் இறவையில் சாகுபடி செய்ய உகந்தது |



## 13. மிளகாய் - கேகேஎம் (சிஎச்) 1

சிறப்பியல்புகள்

- அதிக மகசூல்
- செடிகள் குட்டையாகவும் அடர்ந்தும் வளரக்கூடியது
- பழங்கள் கவர்ச்சிகரமான சிவப்பு நிறத்துடனும், காய்ந்த வற்றல் சுருக்கங்கள் இன்றியும் காணப்படும். சந்தையில் நல்ல விலை கிட்டும்
- பழங்களில் காரத்தன்மை (0.54%) ஒலியோரெசின் (13.4%) மற்றும் விதையளவு (49.77 எண்ணிக்கை,பழம் ) அதிகம்
- பழ அழுகல் நோய்க்கு ஓரளவு எதிர்ப்பு சக்தியும் (பிடிஐ 1.10). தேமல் நோய்க்கு தாங்கும் தன்மையும் கொண்டது (பிடிஐ 3.02)

| | |
|---|---|
| உருவாக்கிய முறை | எண் 240 , கோ 3 ஆகியவற்றின் இனக்கலப்பு மூலம் உருவாக்கப்பட்டது |
| வயது (நாட்கள்) | 200 |
| பருவம் | செப்டம்பர் -அக்டோபர் |

விளைச்சல்

| | |
|---|---|
| டன் , எக் (காய்ந்த வற்றல்) | 3.03 |
| கூடுதல் மகசூல் | |
| பிகேஎம் 1 | 35.61 |
| கே 1 | 38.41 |

| | |
|---|---|
| அதிகபட்ச மகசூல் | 3.762 டன்,எக் |
| பயிரிட உகந்த மாவட்டங்கள் | திருநெல்வேலி, விருதுநகர், தூத்துக்குடி மற்றும் இராமநாதபுரம் பகுதிகளில் தோட்டக்கால் நிலங்களில் பயிரிட ஏற்றது |



## 14. தைம் - ஊட்டி (டிவி)

சிறப்பியல்புகள்

- அதிக பச்சை இலை மகசூல் அளிக்கும் திறன் கொண்டது
- இலைகள் அதிக எண்ணைச்சத்து (0.7%) கொண்டுள்ளது. இது உள்ளூர் இரகத்தை விட 75 சதம் அதிகமாகும்.
- அதிக தைமால் (23.63 சதம்) கொண்டுள்ளது. இது உள்ளூர் இரகத்தை விட 16.98 சதம் அதிகமாகும்.
- பச்சை மற்றும் உலர்ந்த இலைகள் நல்ல மணத்துடன் சமையலுக்கு ஏற்றது.
- வேர் அழுகல் நோய், வேர் முடிச்சு நூற்புழு, வெள்ளை ஈ மற்றும் அசுவினிக்கு எதிர்ப்புத் திறன் கொண்டது.

| | |
|---|---|
| உருவாக்கிய முறை | பண்பக கரூவூலத்திலிருந்த நாற்றுக்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்டது. |
| வயது (நாட்கள்) | பல்லாண்டு பயிர். நான்கு வருடம் வரை வியாபார ரீதியில் பயிர் செய்யலாம். |
| பருவம் | ஜூன்-ஜூலை மற்றும் செப்டம்பர் - அக்டோபர் (மானாவாரி) |

விளைச்சல்

| | |
|---|---|
| டன் , எக் (பச்சை இலை , வருடம்) | 10.7 |
| கூடுதல் மகசூல் | |
| உள்ளூர் இரகம் | 33.7 |

| | |
|---|---|
| அதிகபட்ச மகசூல் | 11.5 **டன் , எக்** |
| பயிரிட உகந்த மாவட்டங்கள் | கடல் மட்டத்திலிருந்து 900 - 2500 மீட்டர் உயரம் கொண்ட நீலகிரி மாவட்ட குளிர் மண்டல பகுதிகள் மற்றும் அதற்கு ஒத்த இடங்கள். மண்ணின் காரஅமிலத்தன்மை 5.5 முதல் 6.5 வரை கொண்ட நல்ல வடிகால் வசதியுள்ள செம்பொறை மண் உகந்தது. |

